**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 18.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 7357/E/2018**

திரு பொ.கருணாகரன் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 501. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 09.12.2017 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 05.07.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 01.10.2018 |

******

**ஆணை**

இன்று (18.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு பொ.கருணாகரன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி செ.கல்பனா, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 09.12.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் பட்டா எண்.596-ல் உள்ள 15 புல எண்கள் அனைத்திற்கும் நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படும் 'அ' பதிவேடு நகல், கிராமக் கணக்கு எண்.2, அடங்கல் நகல்கள் (01.07.2013 முதல் 01.07.2017 வரை), பட்டா மாறுதல் உத்திரவு எண்.1037/2014/அ6, நாள் 02.02.2014, 01.07.2013 - 30.06.2014 வருவாய் ஆண்டுக் கிராமக் கணக்கு எண்.3, கிராமக் கணக்கு எண்.10(1) பட்டா எண்.215 மற்றும் 596 ஆகியவற்றிற்கு சிட்டா (01.07.2013 முதல் ஐந்து வருவாய் ஆண்டிற்குரியது), 01.07.2013 முதல் 30.06.2017 வரை நான்கு வருவாய் ஆண்டிற்கான கணக்கு எண்.10(2)-ன் அனைத்து பக்கங்கள், மேற்படி காலத்திற்கான கிராமக் கணக்கு எண்.12-ன் வருவாய்த் தீர்வாய ஒப்புதலுடன், 01.07.2017 நடப்பு வருவாய் ஆண்டின் கணக்கு எண்.13-ன் தண்டல் நகல் மற்றும் செலுத்துச் சீட்டு நகல், 01.07.2013 முதல் 30.06.2017 வரையான கிராமக் கணக்கு எண்.14, அதன் நிலுவை மற்றும் நடப்புக் கேட்பு வசூல் நிலுவை விபரங்கள் அடங்கிய பதிவேடுகளின் நகல், புதிய மின் இணைப்பு பெற நெல்வாய் கிராம நிர்வாக அலுவலர் உரிய சான்றுகள் அளிக்க மறுத்ததால் 11.09.2017, 25.09.2017 மற்றும் 09.10.2017 ஆகிய மனுநீதி நாட்களில் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களிடம் அளித்த மனுக்கள் மீது வட்டாட்சியர் பணி செய்யாமல் தவறியதற்கான காரணம் என 10 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 09.01.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் அதிகப்படியாக இருப்பதால் வழங்க இயலவில்லையெனப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 05.07.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை வருவாய் கோட்டாட்சியர் அலுவலர், காஞ்சிபுரம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தருமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 01.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (18.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க

பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலானது அதிக அளவிலாக உள்ளதால் சட்டப்பிரிவு 7(9)-ன்படி வழங்க இயலவில்லையெனவும், தனக்கு வேண்டிய தகவலைக் குறிப்பிட்டுக் கோரினால் அவற்றின் நகல்கள் வழங்கப்படுமென்றும், மேற்படி தகவல் 09.01.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் மேல்முறையீட்டாளர் 09.12.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் அதிக அளவிலானதாகவும், பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை மிகவும் பாதிப்பதாக உள்ளதாகவும், பல ஆவணங்களிலிருந்து சேகரித்து, தொகுத்து வழங்கக்கூடியதாக உள்ளதாகவும் அமைந்துள்ளது அறிய முடிகின்றது. எனவே பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு 09.01.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கப்பட்டுள்ள தகவலை ஆணையம் ஏற்றுக் கொள்கின்றது.

7. விசாரணையின்போது மேல்முறையீட்டாளரிடம் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோருமாறு வினவியபோது, கிராம நிர்வாக அலுவலரால் கையாளப்படும் ஆவணங்களைப் பார்வையிட அனுமதி வழங்குமாறு கோரியதனை ஆணையம் ஏற்று, ஏற்கெனவே பொதுத் தகவல் அலுவலரால் அறிவுறுத்தப்பட்டவாறு தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோருமாறு மேல்முறையீட்டாளருக்கு அறிவுறுத்தப்பட்டு, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரால் கையாளப்படும் ஆவணங்களைச் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருடன் இணைந்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு**

**உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 7357/E/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 501.

**மனுதாரர்**

திரு பொ.கருணாகரன்,
எண்.32B/46, வைத்தியர் தெரு,
பெரிய காஞ்சிபுரம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 502.

Copy to: Judgement File.
24/09/19